DEPOSITION OF WITNESS

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

MCOP No. 146/2017

*மனுதாரர் தரப்பு 1வது சாட்சி வாக்குமூலம்*

| | |
|---|---|
| Name | வேலுசாமி |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

2020*ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18ம் நாள் மனுதாரர் தரப்பு சாட்சி 1ம் வாக்குமூலம் (1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 10வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. பவுலா கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.*

***<u>முதல் விசாரணை:</u>***

*நான் இந்த மனுவின் மனுதாரர். மனு சம்பந்தமாக நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட புகைப்பட நகல் ம.சா.ஆ 1. இறந்து போன மாட்டின் பிரேத பரிசோதனை அறிக்கையின் கார்பன் நகல் ம.சா.ஆ.2. தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலிருந்து எனக்கு வழங்கப்பட்ட மருத்துவ விடுவிப்பு அறிக்கை ம.சா.ஆ.3. காப்பீடு சான்றிதழின் புகைப்பட நகல் தாக்கல் செய்துள்ளேன். பதிவு சான்றிதழின் புகைப்பட நகல் தாக்கல் செய்துள்ளேன். ஓட்டுநர் உரிமத்தின் புகைப்பட நகல் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எடுக்கப்பட்ட சி.டி ஸ்கேன் அறிக்கை ம.சா.ஆ.4. என்னுடைய வங்கி பாஸ் புத்தகத்தின் புகைப்பட நகல் தாக்கல் செய்துள்ளேன். அது அசல் ஆவணத்துடன் ஒப்பிடப்பட்டு ம.சா.ஆ.5*

ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகல் தாக்கல் செய்துள்ளேன். அது அசல் ஆவணத்துடன் ஒப்பிடப்பட்டு ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தில் இறந்து போன மாடு மற்றும் சேதமடைந்த மாட்டுவண்டியின் புகைப்படம் ம.சா.ஆ.7. மனுப்படி உத்தரவாக வேண்டும்.

எதிர் மனுதாரர் தரப்பில் கு.வி.

வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/- எஸ்.ஹேமா,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தூத்துக்குடி.